Dt.: Crl. Misc. Petition

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

## C. C.No. 361 / 2023

DEPOSITION OF WITNESS : P.W. 5

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலமுருகன் | Father's Name/ Husband Name | : செல்வபொன்னாண்டி |
| Village | மதுரை | Taluk | : |
| Religion | : | Age | : 55 |
| Calling | : சார்பதிவாளர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.06.2024

(எதிரிகள் 2,3,5 முதல் 8, 10 முதல் 18, 20 ஆஜர். 1, 19-ம் எதிரிகள் ஆஜர் இல்லை . கு.வி.மு.ச பிரிவு 317-ன்படியான மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டுள்ளது )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மதுரையில் சார்பதிவாளராக பணியாற்றிவருகிறேன் . கடந்த 05.07.2012– முதல் 06.09.2016 வரை கடமலைக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணியாற்றியபோது தேனி மாவட்ட குற்றபிரிவு வழக்கு எண் 15/2016 வழக்கு தொடர்பாக கீழ்கண்ட 19 ஆவணங்கள் வழங்குமாறு தேனி மாவட்ட குற்றப்பிரிவு சார்பு ஆய்வாளரால் 29.06.2016–ம் தேதி எனக்கு கடிதம் கொடுக்கப்பட்டது. அந்த கடித எண்.92/2016, நாள் 04.07.2016–ன்படி ஆவணங்களின் நகல்கள் என்னால் சான்றொப்பமிட்டு மேற்படி அலுவலருக்கு என்னால் அனுப்பப்பட்டது .

ஆவண எண்.249/1995, 111/2005, 112/2005, 637/2005, 1039/2005, 728/2006, 1553/2007, 1160/2008, 1161/2008, 1162/2008, 1164/2008, 1165/2008, 1166/2008, 1168/2008, 300/2009, 1818/2009, 2556/2011, 448/2015 454/2015 இந்த ஆவணங்களின் நகல்களை என்னால் கையொப்பமிட்டு வழங்கினேன். **இந்த 19 ஆவணங்களும் அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.21 ஆகும்.** இதுசம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2012 – 2016 வரை கடமலைக்குண்டுவில் சார்பதிவாளராக பணியாற்றினேன் என்றால் சரிதான். 448/2015 454/2015 இந்த இரண்டு ஆவணத்தை நான்தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான் . அதில் தவறு இருந்தால் நான் பதிவு செய்திருக்கமாட்டேன். ஒரு ஆவணத்தில் சாட்சிகளாக கையொப்பம் செய்யும் நபர்கள் ஆவணத்தின் தன்மை அறிந்து , அந்த நபர்களை தெரிந்து, சொத்துவிபரத்தினை தெரிந்துதான் அதில் கையொப்பம் செய்கிறார்கள் என்றால் சாட்சிகளுக்கு அதுபற்றி தெரியுமா என்பது பற்றி தெரியாது.

குறிப்பாக 1818/2009 என்ற ஆவணத்தில் உள்சாட்சியாகவும் , வெளிசாட்சியாகவும் புகார்தாரர் செல்வராஜ் அவர்கள் சமயன் துரைச்சாமி அவர்களிடம் கிரையம் பெற்ற ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் 1818/2009 என்ற ஆவணம் கடமலைக்குண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்தது உண்மைதான். அந்த ஆவணத்தில் சாட்சியாக கையொப்பம் செய்தது செல்வராஜ் என்றால் சரிதான்.

நான் கொடுத்த 19 ஆவணத்தில் எந்தஒரு ஆவணத்திலாவது செல்வராஜ் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் ஆவண எண் 112/2005–ல் உள்ள புலஎண் 1116/1J–ல் உள்ள விஸ்தீரணம் ஒரு ஏக்கர் 80 சென்டில் தெற்குபக்கம் உள்ள ஒரு ஏக்கர் 30 சென்ட் காட்டப்பட்டுள்ளதா, அதாவது மேற்கூறிய 19 ஆவணங்களில் எந்த ஆவணத்திலாவது இந்த சொத்துகள் கிரையம் பெற்றதாக / இதர பரிமாற்றம் செய்யப்பட்டதாக காட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

மேற்கூறிய 19 ஆவணங்களும் கிரையம் பெற்றது என்றால் சரிதான் . 2005–ம் ஆண்டிற்கு பிறகு வரும் ஆவணங்கள் ஏதாவது போலியாகவோ, மோசடியாகவோ எந்த ஆவணமாவது பதியப்பட்டதாக தெரிந்ததா என்றால் பதிவு செய்யும்போது அதன்முன்பதிவு ஆவணங்களை வைத்து பதியப்பட்டுள்ளது.

19 ஆவணங்களும் மோசடியாகவோ , ஆள்மாறாட்டம் செய்தோ , பதிவு செய்யப்படவில்லை என்றால் இருக்கலாம் . அவையனைத்தும் முறையாக மூலஆவணங்களின் அடிப்படையில் உண்மைத்தன்மையோடு பதிவு

செய்யப்பட்டுள்ளது என்றால் உண்மைத்தன்மையை பற்றி என்னால் கூறமுடியாது .

ஆனால் மூல ஆவணங்கள் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது.

T PITCHAIRAJAN

Digitally signed by T PITCHAIRAJAN
Date: 2024.07.04 14:42:34 +0530